கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 106/2015

நாள்: 10.02.2026.

பெயர்: ராஜேந்திரன் (வா.சா.1) த/பெ: சுப்ரமணியன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1) எத்தனை அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் 9 செண்டிற்கு. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 9 செண்டிற்கான நான்கெல்லை தெரியுமா என்றால் கிழக்கில் அஞ்சலை, மேற்கில் எனது இடம், எனது இடத்திற்கு அடுத்து பன்னீர் செல்வம், தெற்கில் எனது தந்தை சுப்ரமணியன், பன்னீர்செல்வம், வடக்கில் மெயின்ரோடு ஆகும். 1ம் பிரதிவாதி எனது சித்தப்பா, 2ம் பிரதிவாதி எனது உறவுக்காரர் அல்ல. தாவா சொத்தைப் பொறுத்து அ.வ.எண்.61/2015 நடந்துவரும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். இறந்த 1ம் வாதி எனது தந்தை ஆவார். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும், தகராறு ஏற்பட்டு அதனைப் பொறுத்து ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC.340/2017 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

**(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/சு.ராஜேந்திரன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.